<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

Spl.CC 97/2025

அரசுதரப்பு 33 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துவடிராஜ் | வயது | : | 58 |
| தந்தை/கணவர் பெயர் | : | மகாலிங்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலுக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 18.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–** நான் சேத்தியாதோப்பில் குடியிருந்து வருகிறேன். தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு வத்தவராயன் தெத்து கிராமத்தில் மூன்றரை ஏக்கர் நிலம் உள்ளது. அதில் நான் தான் பயிர் வைத்துள்ளேன். வேறு யாரிடமும் அந்த நிலத்தினை குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ விடவில்லை. 2005 ஆம் ஆண்டு எங்கள் ஊரில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. அதில் நான் பயிரிட்டிருந்த நெல் பயிர் பாதிப்படைந்தது. ஆஜர் 1 ஆம் எதிரியை எனக்குத் தெரியும். அவர் எங்கள் ஊரில் அந்த காலத்தில் வி.ஏ.ஓ வாக இருந்தார். என் நிலத்தில் வந்து கணக்கு எடுத்து சென்றார்கள். எனக்கு வெள்ள பாதிப்பிற்காக பணம் கொடுத்தார்கள். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் படிவம் 6 ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.

சர்வே எண் 46/8 பி ல் உள்ள நிலம் என் தந்தை பெயரில் உள்ள நிலம் ஆகும். பன்னீர் செல்வம் என்பவருக்கு என் நிலத்தினை நான் குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ விடவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

என் பெயரில் உள்ள நிலத்தின் சர்வே எண் தெரியாது. பட்டா எண் தெரியும். என் பெயரில் உள்ள நிலத்தினை என் அப்பா எனக்கு எழுதிவைத்தது. அந்த சொத்தில் தான் நான் நிவாரணம் வாங்கினேன் என்றால் ஆமாம். என் அப்பா நிலத்தின் சர்வே எண் 46/8 பி என்றால் சரிதான். போலிசார் என்னை வி.ஏ.ஓ அலுவலகத்தில் விசாரித்தனர். அப்போது நிவாரணம் கிடைக்காதவர்களும் அங்கு இருந்தார்கள் எனற்ால் சரிதான்.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

Spl.CC 97/2025

அரசுதரப்பு 34 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பொன்னி | வயது | : | 60 |
| தந்தை/கணவர் பெயர் | : | ராயர் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 18.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் கிளாவடி நத்தம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். இல்லத்தரசியாக இருக்கிறேன். எனக்கு வத்தராயன்தெத்து, கிளாவடிநத்தம், சீயப்பாடி ஆகிய கிராமங்களில் நிலம் இருந்தது. அது என் கணவர் பெயரில் இருந்தது. ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. என் நிலத்தில் நான் நெல் பயிர் செய்தேன். 2005 ஆம் ஆண்டு வெள்ளம் வந்து நான் பயிரிட்ட நெல் பயிர் பாதிக்கப்பட்டது. பாதிப்பு சம்பந்தமாக ஊரில் வி.ஏ.ஓ வந்து கணக்கு எடுத்துசென்றார். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் படிவம் 6 ல் பக்கம் 67 ல் வரிசை எண் 331 ல் உள்ள கையெழுத்து என் கணவருடைய கையெழுத்து இல்லை. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் படிவம் 6 ல் பக்கம் 67 ல் உள் ளவரிசை எண் 331 **அ.த.சா.ஆ. 28.**

என் கணவர் எந்த நிவாரண தொகையும் பெறவில்லை. சர்வே எண்கள் 17, 16 ஏ ஆகியவை எங்கள் நிலத்தின் சர்வே எண்களா என்று தெரியாது. என் கணவர் அதற்கு எந்த நிவாரணத் தொகையும் பெறவில்லை. இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு துறை போலிசார் என்னை விசாரித்தனர்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

எனது கணவருக்கு மஞ்சக்கொல்லை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் கணக்கு இருந்தது. வெள்ள நிவாரணம் கொடுத்த போது என் கணவர்உயிருடன் தான் இருந்தார். வெள்ள பாதிப்பு நிவாரணம் குறித்து என்னிடம் என் கணவர் விவரம் சொல்லவில்லை. வெள்ள நிவாரணத்தொகையை என் கணவர் வாங்கிக்கொண்டார் என்பதும், எனக்கு விவரம் தெரியவில்லை என்பதும், என் கணவர் தற்போது இறந்துவிட்டதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் சரியல்ல.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.
Spl.CC 97/2025

அரசுதரப்பு 35 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆனந்தபாபு | வயது | : | 40 |
| தந்தை/கணவர் பெயர் | : | கருணாநிதி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 18.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் வத்தவராயன் தெத்து கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு வத்தவராயன் தெத்து கிராமத்தில் 1 ஏக்கர் நிலம் என் அப்பா பெயரில் இருந்தது. அதில் நெல் பயிர் செய்திருந்தேன். 2005 ஆம் ஆண்டு வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. அதில் நான் பயிட்டிருந்த நெல் பாதிக்கப்பட்டது. அதிகாரிகள் வந்து கணக்கு எடுத்து சென்றனர். ஆஜர் 1 ஆம் எதிரி தான் அப்போது வி.ஏ.ஓ வாக இருந்து கணக்கு எடுத்தார். என் அப்பாவிற்கு வெள்ள நிவாரண தொகை கிடைக்கவில்லை. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் படிவம் 6 ல் பக்கம் 47 வரிசை எண் 228 ல் உள்ள கையெழுத்து என் அப்பாவின் கையெழுத்து இல்லை.

என் நிலத்தினை என் அப்பா ராயர், த/பெ. கோவிந்தசாமி என்பவருக்கு எந்த காலத்திலும் குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ விட்டதில்லை. இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு துறை போலிசார் என்னை விசாரித்தனர்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

போலிசார் விசாரணையில் என்னிடம் காட்டப்பட்ட கையெழுத்து என் அப்பாவுடையது இல்லை என்ற விவரத்தினை சொல்லியுள்ளேன். பொதுவாக யார் பயிர் வைக்கிறார்களோ அவர்களுக்கு தான் அடங்கல் கொடுப்பார்கள் என்றால் சரிதான். வெள்ள பாதிப்பு பணமும் யார் பயிர் வைத்தார்களோ அவருக்கு தான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். சொத்து என் அப்பா பெயரில் தான் உள்ளது. என் தந்தை நிலத்தினை போக்கியத்திற்கு வைத்திருந்தவர்கள் இழப்பீடு வாங்கிக்கொண்டனர் என்பதும், எனக்கு நேரடியாக நிவாரணம் கொடுக்காததால் காழ்புணர்ச்சியில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் சரியல்ல.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

Spl.CC 97/2025

அரசுதரப்பு 36 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேணுகோபால் | வயது | : | 65 |
| தந்தை/கணவர் பெயர் | : | சந்திரகாசு | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 18.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் வத்தவராயன் தெத்து கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 1 ஆம் எதிரியை எனக்குத் தெரியும். என்ஊரில் எனக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது. நான் அதில் நெல் பயிரிட்டிருந்தேன். எந்த காலத்திலும் என் நிலத்தினை யாருக்கும் குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ நான் கொடுக்கவில்லை. 2005 ஆம் ஆண்டு எங்கள் ஊரில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டதில் நான் பயிரிட்டிருந்த நெல் பாதிக்கப்பட்டது. பாதிப்பு சம்பந்தமாக கணக்கு எடுத்து சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் மஞ்சக்கொல்லை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் படிவம் 6 ல் பக்கம் 39 ல் வரிசை எண் 188 ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ. 29** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நிவாரண தொகை பெற்றதற்காக அந்த கையெழுத்தை போட்டேன். என் நிலத்தினை ஞானசேகரன் மற்றும் தமிழ்மணி ஆகியோர்களுக்கு நான் அந்த காலத்தில் போக்கியத்திற்கோ, குத்தகைக்கோ கொடுக்கவில்லை. மேலும், அவர்கள் என் நிலத்தில் எந்த காலத்திலும் பயிர் வைக்கவில்லை. என் மனைவி சந்திரா என்பவரும் அந்த காலத்தில் வெள்ள பாதிப்பு நிவாரணம் பெற்றார். இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு துறை போலிசார் என்னை விசாரித்தனர்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

எனக்கு கூட்டுறவு வங்கியில் கணக்கு உள்ளது. வெள்ள பாதிப்பு கணக்கு எடுத்த போது வேளாண்மை துறை அதிகாரிகளும் உடன் வந்து கணக்கு எடுத்தார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண தொகை நேரடியாக வங்கியில் தான் கொடுத்தார்கள். நானும் வங்கி கணக்கு மூலமாக தான் நிவாரணம் பெற்றேன் என்றால் சரிதான். எங்கள் பகுதியில் நிவாரணம் கிடைக்காதவர்கள் வி.ஏ.ஓ அலுவலகத்தில் முறையிட்டனர் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் நிலத்தின் சர்வே எண் எனக்குத் தெரியாது. என் நிலத்திற்கு நான் முழுமையாக நிவாரணம் வாங்கவில்லை. எனக்கும் என் மனைவிக்கும் சேர்த்து நிவாரணம் ரூ.10875/– கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.
Spl.CC 97/2025

அரசுதரப்பு 37 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தர்மராஜா | வயது | : | 45 |
| தந்தை/கணவர் பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 18.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் வத்தவராயன் தெத்து கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் 1 ஆம் எதிரியை எனக்குத் தெரியும். என்ஊரில் எனக்கு 4 ஏக்கர் நிலம் இருந்தது. அதில் நான் தான் பயிர் செய்து வருகிறேன். அந்த நிலத்தினை குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ விடவில்லை. 2005 ஆம் ஆண்டு எங்கள் ஊரில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. அதில் நான் பயிரிட்டிருந்த நெல் பயிர் பாதிப்படைந்தது. என் நிலத்தில் வந்து கணக்கு எடுத்து சென்றார்கள். எனக்கு வெள்ள பாதிப்பிற்காக பணம் கொடுக்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் படிவம் 6 ல் பக்கம் 19 ல் வரிசை எண் 89 ல் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை.

என் நிலத்தினை கலியபெருமாள் மகன் ஞானசேகரனுக்கு குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ விட்டதில்லை, அந்த பெயரில் எங்கள் ஊரில் யாரும் இல்லை. இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு துறை போலிசார் என்னை விசாரித்தனர்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

என் நிலத்தின் சர்வே எண் 72/8 என்றால் சரிதான். நான் நிவாரண தொகை வாங்கவில்லை. கையெழுத்தும் போடவில்லை. போலிசார் விசாரிக்கும் போது இந்த விவரங்களை சொல்லியுள்ளேன். நிவாரண தொகை கிடைக்கவில்லை என்று எங்கள் ஊரில் நாங்கள் யாரிடமும் சென்று முறையிடவில்லை. வெள்ள பதிப்பு கணக்கு எடுக்க வேளாண் துறை அதிகாரிகள் வந்தனர் என்றால் சரிதான்.

முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

Spl.CC 97/2025

அரசுதரப்பு 38 வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சமதர்மன் | வயது | : | 58 |
| தந்தை/கணவர் பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)–ன் விதிமுறைகளின்படி 18.02.2026 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**அரசு தரப்பில் முதல் விசாரணை–**

நான் வத்தவராயன் தெத்து கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என் ஊரில் எனக்கு 5 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் நான் தான் பயிர் செய்து வருகிறேன். அந்த நிலத்தினை நான் யாருக்கும் குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ விடவில்லை. 2005 ஆம் ஆண்டு எங்கள் ஊரில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. அதில் நான் பயிரிட்டிருந்த நெல் பயிர் பாதிப்படைந்தது. அதிகாரிகள் வந்து கணக்கு எடுத்து சென்றார்கள். ஆஜர் 1ஆம் எதிரி தான் அப்போது எங்கள் ஊர் வி.ஏ.ஓ வாக இருந்தார். அவர் தான் கணக்கு எடுத்தார். நான் வெள்ள பாதிப்பு பணம் வாங்கிக்கொண்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் படிவம் 6 ல் பக்கம் 13 ல் வரிசை எண் 33 ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ. 30** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நிவாரண தொகை பெற்றதற்காக அந்த கையெழுத்தை போட்டேன். ஜகநாதன் மகன் சிவக்குமார் என்பவருக்கு நான் எந்த காலத்திலும் குத்தகைக்கோ, போக்கியத்திற்கோ விடவில்லை. அந்த பெயரில் எங்கள் ஊரில் யாரும் இல்லை. இது சம்பந்தமாக லஞ்ச ஒழிப்பு துறை போலிசார் என்னை விசாரித்தனர்

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

எனக்கு மஞ்சக்கொல்லை தொடக்க கூட்டுறவு வங்கியில் கணக்கு உள்ளது. வெள்ள பாதிப்பு கணக்கு எடுத்த போது வேளாண்மை துறை அதிகாரிகளும் உடன் வந்து கணக்கு எடுத்தார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண தொகை நேரடியாக வங்கியில் தான் கொடுத்தார்கள். நானும் வங்கி கணக்கு மூலமாக தான் நிவாரணம் பெற்றேன் என்றால் சரிதான். யார் பயிர் வைக்கிறார்களோ அவர்களுக்கு தான் அடங்கல் கொடுப்பார்கள் என்றால் சரிதான். சர்வே எண்கள் 5, 5/4, 5/5 ஏ, 5/6 என்னுடையது. என் மனைவி தமிழ்செல்விக்கு நிவாரணம் கொடுக்கவில்லை. போலிசார் விசாரணையில் என் மனைவி நிவாரணம் வாங்கவில்லை என்று சொல்லியுள்ளேன். எனக்கு குறைவான தொகை நிவாரணமாக கொடுக்கப்பட்டதால் காழ்புணர்ச்சியில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதும் சரியல்ல.